# மத்திய நுவரகம்பலாத்த பிரதேச சபை

## அனுராதபுரம் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 யூன் 14 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மே 17 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 திசெம்பர் 12 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, மத்திய நுவரகம்பலாத்த பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மத்திய நுவரகம்பலாத்த பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ரூபா 1,418,045 கூட்டுத்தொகையான நூலகப் புத்தகங்கள், அலுவலக உபகரணங்கள், பேக்கரி உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதி நிலையான சொத்தாகக் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 24,886 கூட்டுப்பெறுமதியான எஞ்சிய காகிதாதிகள் மற்றும் எரிபொருள் இருப்பு, இறுதியிருப்பாகக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தகனக்கூடத்தை நிர்மாணிப்பதற்காக உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 4,917,315 தொகையான கடன் கணம் பொறுப்பாகவும் தகனக்கூடத்தை நிர்மாணிக்கும் மொத்தக் கிரயமான ரூபா 14,900,957 தொகை நிலையான சொத்தாகவும் கணக்கு வைகப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

04 கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை மற்றும் அவற்றுக்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கிடையே ரூபா 2,763,599 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 12,630,559 கூட்டுத்தொகையான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 234,177 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,837,398 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக்கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி இல. 99 இற்கு முரணாக ரூபா 380,316 கூட்டுத்தொகையான 24 உறுதிச்சீட்டுக்கள் உறுதிப்படுத்தப்படாமல் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக்கட்டண (விஷேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் வியாபார அனுமதிப்பத்திர அடிப்படையில் அறவிட வேண்டிய ரூபா 192,451 தொகையான 10 சதவீத முத்திரை வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 237(அ) மற்றும் (ஆ) இன் பிரகாரம் களஞ்சிய வழங்கலுக்கான கொடுப்பனவுகளைச் செய்யும் போது உரிய பொருட்கள் உடன்படிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட தரத்தில் களஞ்சியத்திற்கு கிடைத்தமைக்கு களஞ்சியப் பொறுப்பு உத்தியோகத்தரினால் சான்றிதழ் வழங்க வேண்டியிருந்த போதிலும் ரூபா 546,767 கூட்டுத்தொகையான பொருட் கொள்வனவின் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 30 | 3 | - |
| (ii) | வாடகை | 271 | 7,443 | 404 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 300 | 2,894 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 15,024 | 9,226 | 1,380 |

**2.3.2 ஆதனவரி**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134(i) ஆம் பிரிவின் பிரகாரம் சபையினால் அதிகாரப்பிரதேசத்தில் அமைந்துள்ள அபிவிருத்தியடைந்த பிரதேசம் இனங்காணப்பட்டு ஆதனவரி அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 வாடகை**

09 கடைகளில் 10 வருட காலமாக நிலுவையாகக் காணப்பட்ட கடை வாடகை ரூபா 301,390 ஆகும்.

**2.3.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 19,313 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 2,352,897 |

**2.4 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்**

ரூபா 1,178,514 கூட்டுப்பெறுமதியான அரிசி மாவை அண்மித்த பேக்கிரி உற்பத்தித் தொகுதிகள் மற்றும் கட்டிடம் என்பன பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

**2.5 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132(ஒ) பிரிவின் பிரகாரம் ரூபா 59,000 தொகையான விழாச் செலவினங்களுக்காக விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**2.6 ஒப்பந்த நிருவாகம்**

மீளாய்வாண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட ரூபா 2,000,000 கூட்டுக்கிரயமான 03 செயற்திட்டங்களின் வேலை பூர்த்தி செய்யப்பட்டாது கைவிடப்பட்டிருந்தது.

**2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

(அ) பிரதேச சபையில் வெற்றிடமான 11 பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கோ அல்லது மிகையான 32 பதவியணியினரை நிரந்தரமாக்குவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எதிர்வரும் வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டமும் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) வருமான நிருவாகம்